


# சீறத்துன்னபி ﷺ

## நாள் 7

# இன்றைய தலைப்புகள்:

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களைப் பற்றி கதீஜா (ரலி) கேள்விப்பட்டது
- பகுதி 2: வணிகப் பயணம் மற்றும் திருமண முன்மொழிவு
- பகுதி 3: கதீஜா (ரலி) அவர்களை திருமணம் செய்துகொண்டது
- பகுதி 4: கஃபாவை மீண்டும் கட்டுதல்
- பகுதி 5: கருங்கல்லை வைப்பது மற்றும் கஃபாவில் செய்யப்பட்ட மாற்றங்கள்

# பகுதி 1: நபி (ஸல்) அவர்களைப் பற்றி கதீஜா (ரலி) கேள்விப்பட்டது

- நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால தொழில் ஆடு, ஒட்டகங்களை மேய்ப்பதாக இருந்தது என்று முன்பு குறிப்பிட்டிருந்தோம்.

- மக்காவில் கதீஜா (ரலி) என்ற வணிகப் பெண்மணி இருந்தார். அவர் செல்வம் மற்றும் உயர்ந்த பரம்பரைக்கு பெயர் பெற்றவர்.

- கதீஜா (ரலி) அவர்களின் மூத்த சகோதரி ஹலாஹ். அவரிடம் ஒரு ஒட்டகக் கூட்டம் இருந்தது.

- அவர், நபி (ஸல்) அவர்களையும் மற்றொரு இளைஞனையும் சேர்த்து தனது ஒட்டகங்களை மக்காவிற்கு வெளியே கொண்டு சென்று மேய்க்க வேலைக்கு அமர்த்தினார்.

- அவர்கள் இருவரும் தினசரி பணியை முடித்ததும், ஹலாஹ்வின் வீட்டிற்குச் சென்று தங்களது கூலியைக் கேட்டு வாங்க வேண்டும்.

- நபி (ஸல்) அவர்கள் பெண்களின் முன் வருவதற்கு வெட்கப்பட்டதால், அந்த இளைஞனிடம் தன் கூலியையும் சேர்த்து கேட்டு வாங்கி வரும்படி கூறினார்கள்.

- அந்த இளைஞன் ஹலாஹ்வின் வீட்டிற்குச் சென்றபோது, அவருடைய சகோதரி கதீஜா (ரலி) அவர்களும் அங்கே இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களைப் பற்றி ஹலாஹ் விசாரித்த போது, ‘அவர் பெண்கள் முன் வருவதற்கு வெட்கப்படுகிறார்’, என்று அந்த இளைஞன் கூறினான்.

- அப்போது ஹலாஹ், ‘‘முஹம்மது என்ற இந்த மனிதரை விட வெட்கமும், கண்ணியமும், மரியாதையும், ஒழுக்கமும் கொண்ட எந்த மனிதரையும் நான் பார்த்ததில்லை’’ என்று கூறினார். அப்பொழுதுதான் கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பெயரை முதன்முதலில் கேட்டார்கள்.

- அந்த ஆண்டின் பிற்பகுதியில், கதீஜா (ரலி) வியாபாரத்திற்காக தனது வணிக வாகனத்தை சிரியாவிற்கு அனுப்ப வேண்டியிருந்தது.

- கதீஜா (ரலி) அவர்களுக்கு ஏராளமான செல்வம் இருந்தது. அவர்களுக்கு

இரண்டு முறை திருமணம் நடந்திருந்தது.

- அவரது இரண்டாவது கணவர் ஒரு பணக்கார வணிகர். அவர் இறந்தபோது, அவருக்கு உடன்பிறந்தவர்களோ, குழந்தைகளோ இல்லை. எனவே அவரது அனைத்து செல்வங்களும் கதீஜா (ரலி) அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

- அவர் அந்த செல்வத்தை வணிக வாகனங்களில் முதலீடு செய்தார்கள். அதில் வியாபாரம் செய்ய வணிக வியாபாரிகளை நியமித்து, அதில் ஒரு சில சதவீதத்தை லாபமாக பெறுவார்கள்.

- இருப்பினும், அவர்கள் தாம் வர்த்தகத்தின் முழுப் பலனையும் பெறவில்லை என்று எண்ணினார்கள். அதற்குக் காரணம் தாம் பணியமர்த்திய வணிகர்கள், வியாபார பரிவர்த்தனைகளின் முழுக் கணக்கையும் கொடுப்பதில்லை என உணர்ந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் நேர்மையைப் பற்றி கேள்விப்பட்டதும், அடுத்த வியாபார பயணத்திற்கு அவர்களைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு இதற்கு முன் வியாபார அனுபவம் எதுவும் இல்லை. அப்போது அவர்களுக்கு வயது 25 தான்.

## பகுதி 2: வணிகப் பயணம் மற்றும் திருமண முன்மொழிவு

- நபி (ஸல்) அவர்கள் தனது பெரிய தந்தை அபுதாலிபின் அனுமதியுடன் கதீஜா (ரலி) அவர்களின் சார்பாக வணிக வாகனத்தோடு வியாபாரத்திற்கான பொருட்களைக் கொண்டு சென்றார்கள்.



- கதீஜா (ரலி) அவர்கள் அந்த வர்த்தகத்தில் வரும் லாபத்தில் பாதியை நபி (ஸல்) அவர்களுக்கு வழங்குவதாக வாக்களித்தார்கள். இது அந்தக் காலத்தில் மிகவும் அதிகமான சம்பளமாக இருந்தது. கதீஜா (ரலி) தனது பணியாளரை நபி (ஸல்) அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் இருவரும் சிரியாவுக்குப் புறப்பட்டனர்.

- அவர்கள் திரும்பியதும், கதீஜா (ரலி) வர்த்தகத்தின் மூலம் இதுவரை பெற்றதை விட மிக அதிக லாபத்தைப் பெற்றார்கள். மேலும், பயணத்தின் போது நபி (ஸல்) காட்டிய கரிசனம், அக்கறை மற்றும் நேர்மையைப் பற்றி கூடச்சென்ற வேலைக்காரன் கதீஜா (ரலி) அவர்களிடம் தெரிவித்தான்.

- இதைக்கேட்ட கதீஜா (ரலி) அவர்களுக்கு, நபி (ஸல்) அவர்கள் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. மேலும், அவர்களுக்கு நபி (ஸல்) அவர்களை திருமணம் செய்துகொள்ள ஆர்வம் வந்தது.

- அவர்கள் தனது நோக்கத்தை நஃபீஸா என்ற வயதில் மூத்த ஒரு பெண்ணிடம் தெரிவித்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களிடம் சென்ற நஃபீஸா, நபி (ஸல்) அவர்கள் தன் திருமணத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘என்னை யார் திருமணம் செய்து கொள்வார்கள்? நான் ஓர் அனாதை; குரைஷிகளிலுள்ள ஓர் ஏழை மனிதன்’’ எனக் கூறினார்கள்.

- அப்போது நஃபீஸா, ‘‘கதீஜா (ரலி) உன்னை மணந்து கொள்ள விரும்பினால் நீ என்ன கூறுவாய்?’’ என வினவினார். இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்துவிட்டு பின், ‘‘அவர் ஏன் என்னை மணந்துகொள்ள விரும்புகிறார்’’ எனக் கேட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் இந்த முன்மொழிவை நிராகரிக்கவில்லை என்ற செய்தியை கதீஜா (ரலி) அவர்களிடம் நஃபீஸா கூறினார். இவ்வாறாக இந்தத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

## பகுதி 3: கதீஜா (ரலி) அவர்களை திருமணம் செய்துகொண்டது

- கதீஜா (ரலி) அவர்களின் மாமா அம்ர் இப்னு ஆசாத் முன்னிலையில் அவர்

பாதுகாவலராக இருந்து, நிக்காஹ் செய்து வைக்கப்பட்டது.



- நபி (ஸல்) அவர்களுடன் அபுதாலிப் வந்து நிக்காஹ்வில் குத்பாவை நிகழ்த்தினார். கல்யாண மஹராக 12 உகியா அல்லது 12 வெள்ளிக் கட்டிகள் நிர்ணயிக்கப்பட்டது. அது அந்தக் காலத்தில் மிக சாதாரண தொகையாக இருந்தது.

- சிரியா வணிகப் பயணத்திற்கு 3 மாதங்களுக்குப் பிறகு, ஸஃபர் மாதத்தில் இந்தத் திருமணம் நடந்தது. கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவியானார்கள்.

- கதீஜா (ரலி) மூலம், நபி (ஸல்) அவர்களுக்கு 6 குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை அல்-காசிம். குழந்தை பருவத்திலேயே அக்குழந்தை இறந்து விட்டது.

- அதன்பின் 4 பெண்கள்: ஜைனப், ருக்கையா, உம்மு குல்தும் மற்றும் பாத்திமா.

- அவரது நான்கு மகள்களும் பருவ வயதை அடைந்தபின் திருமணம் செய்து கொண்டனர். இருப்பினும், அவர்களில் மூன்று பேர் நபியின் வாழ்நாள் காலத்திலேயே இறந்து விட்டனர். பாத்திமா (ரலி) மட்டுமே நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இறந்தவர்.

- நபி (ஸல்) அவர்களுக்கு கதீஜா (ரலி) அவர்களுடன் பிறந்த கடைசி குழந்தை அப்துல்லாஹ். அவரும் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டார்.

- கதீஜா (ரலி) அவர்கள் பெற்ற நல்லாசிகள் ஏராளம். அவர்களுடைய அந்தஸ்து

மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தை முதன்முதலில் நம்பி, அவர்களுக்கு ஆறுதல் அளித்தவர்.

- ஸஹீஹ் புகாரியில் உள்ள ஹதீஸ் மூலம் அவர்களது உயர்ந்த நிலையை நாம் புரிந்து கொள்ளலாம்.

- ஒருநாள் கதீஜா (ரலி) மற்றும் நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருந்தபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் அங்கு வந்தார்கள்.

- அப்போது நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களிடம், ‘‘கதீஜாவே! இதோ ஜிப்ரீல் (அலை) இங்கு வந்துள்ளார். அவர் உனக்கு அல்லாஹ்வின் ஸலாத்தை கூறுகிறார். மேலும் சுவனத்தில் உள்ள எவ்வித கஷ்டமும் இல்லாத, அமைதியான ஒரு வீட்டைப் பற்றிய நற்செய்தியை அவர் உனக்கு தெரிவிக்கிறார்’’ என்று கூறினார்கள்.

- அதற்கு கதீஜா (ரலி) அவர்கள், ‘‘இன்னல்லாஹ ஹுவஸ் ஸலாம்; வஆலா ஜிப்ரீல் வஸ்ஸலாம்; வஅலைக்க யா ரசூலல்லாஹ் வஸ்ஸலாம்’’ என்று பதிலளித்தார்கள். இதன் பொருள்: ‘‘அல்லாஹ் மட்டுமே அஸ்ஸலாம்; ஜிப்ரீல் (அலை) மீதும், உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும், யா ரசூலல்லாஹ்’’.

## பகுதி 4: கஃபாவை மீண்டும் கட்டுதல்

- நபி (ஸல்) அவர்களுக்கு 35 வயது இருக்கும் போது, கஃபாவை புதுப்பிக்கும் சம்பவம் நடந்தது.

- அதற்கு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, கஃபா தீயினால் சேதமடைந்து, பலவீனமாக இருந்தது.

- அன்றைய காலத்தில் மக்கள் கஃபாவிற்கு மிக அருகில் வாழ்ந்து வந்தார்கள். அப்போது ஒரு பெண் சமைத்துக்கொண்டிருந்தபோது, சில தீக்கதிர்கள் கஃபாவை மூடியிருந்த துணியின் மீது விழுந்து தீ பற்றிக்கொண்டது.

- தீ அணைக்கப்பட்ட பின்பு, கஃபாவின் கட்டட அமைப்பு பலவீனமடைந்து இருந்தது.

- அதே ஆண்டு, மக்காவில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இது கஃபாவின் கூரையையும், அதன் சில சுவர்களையும் அழித்து விட்டது. இதனால்

கஃபாவின் சில பகுதிகள் மட்டுமே எஞ்சியிருந்தன.

- இதனால் குரைஷிகள் கஃபாவை மீண்டும் கட்டுவதற்கான வழிகளைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் ஜித்தா நகரில் கட்டட பொருட்கள் விற்பனை நடப்பதாக செய்தி கிடைத்தது.

- ரோமப் பேரரசர் யமனில் ஒரு பெரிய தேவாலயத்தை கட்டுவதற்கு பொருட்களை கப்பலில் அனுப்பினார்.

- அவர் சிறந்த மரங்களையும், சிறந்த பளிங்குக் கற்களையும், சிறந்த கைவினைஞர்களையும் தேவாலயத்தைக் கட்டுவதற்காக யமனுக்கு அனுப்பினார்.

- ஆனால் அல்லாஹ்வின் திட்டம் வேறொன்றாக இருந்தது.

- பொருட்களையும், வேலையாட்களையும் ஏற்றிச் சென்ற கப்பல் ஜித்தா கடற்கரைக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது பலத்த காற்று வீசியதால், கப்பல் விபத்துக்குள்ளானது.



- ஆனால், கப்பல் மூழ்கவில்லை; அது ஜித்தாவிக்கு சென்றது.

- எனவே பளிங்குக் கற்கள், மற்றும் விலையுயர்ந்த மரங்கள் கொண்ட அனைத்து சரக்குகளும் ஜித்தா துறைமுகத்தில் தரையிறங்கியது. பின்னர், அப்பொருட்கள் விற்பனைக்கு வந்தன.

- குரைஷிகள் தங்களுடைய செல்வம் அனைத்தையும் சேகரித்து ஜித்தாவிற்கு வந்து, இந்த பொருட்கள் அனைத்தையும் வாங்கினார்கள். இந்த

பொருட்களைக் கொண்டு கட்டும் திறமையுடைய கைவினைஞர்களையும் ரோமில் இருந்து வரவழைத்து வேலைக்கு அமர்த்தினர்.

- குரைஷிகள் கஃபாவின் எஞ்சிய பகுதியை உடைத்துவிட்டு, தங்களை நான்கு குழுக்களாகப் பிரித்துக் கொண்டனர். ஒவ்வொரு குழுவும் ஒரு பக்க சுவரை கட்டவேண்டும் என முடிவு செய்தனர்.

- மிகவும் மதிப்புமிக்க சுவற்றின் பக்கமான கருப்பு கல்லின் மூலை மற்றும் கஃபாவின் நுழைவு, அப்துல் மனாஃப் (அப்துல் முத்தலிப் இந்த வம்சத்திலிருந்து வந்தவர்) கோத்திரத்தாருக்கு வழங்கப்பட்டது.

- பனு மக்ஸூம் (அபு ஜஹ்ல் இந்த வம்சத்திலிருந்து வந்தவன்) கோத்திரத்தாருக்கு அர்-ருக்ன் அல்-யமானி மற்றும் கருங்கல் இடையேயுள்ள சுவரின் பக்கம் கொடுக்கப்பட்டது.

## பகுதி 5: கருங்கல்லை வைப்பது மற்றும் கஃபாவில்செய்யப்பட்ட மாற்றங்கள்

- அஸ்திவாரங்கள் எழுப்பப்பட்ட நிலையில், கருங்கல் வைக்கும் அளவுக்கு சுவர்கள் கட்டப்பட்டுவிட்டது.

- அந்த நேரத்தில், யார் கஃபாவின் மீது கருப்புக் கல்லை வைப்பது என்பதில் இரண்டு கோத்திரத்தாருக்குமிடையில் சிக்கல் ஏற்பட்டது.

- இதனால் கஃபாவின் கட்டுமானம் ஐந்து நாட்களுக்கு நிறுத்தப்பட்டது. கஃபாவின் மீது கருப்புக் கல்லை வைக்கும் உரிமையைப் பெற தாங்கள் மரணம் வரை போராடவேண்டும் என பனு மக்ஸூம் கோத்திரத்தார்கள் முடிவு செய்தனர்.

- இதனை அறிந்த மக்காவின் மதிப்புமிக்க முதியவரான அபு உமையா இப்னு முகீரா, ‘‘இதற்காக மக்கள் ரத்தம் சிந்தக்கூடாது’’ என்று கூறினார்.

- பின்னர் அவர், ‘‘அடுத்ததாக ஹராமின் பிரதான வாசலில் இருந்து உள்ளே வருபவர் (அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் கோத்திரத்தார்) கருப்புக் கல்லை வைக்கும் பெருமையைப் பெறுவார்’’ என்று அறிவித்தார். அனைத்து கோத்திரத்தார்களும் இந்த முடிவை ஏற்றுக்கொண்டனர்.

- நபி (ஸல்) அவர்கள் வாசலில் இருந்து உள்ளே நுழைந்த முதல் நபராக இருந்தார்கள். இதனைக் கண்ட இரு கோத்திரத்தாரும் தங்கள் அனைவராலும் விரும்பப்பட்டவர் முதலில் நுழைந்த நபராக இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். நபி (ஸல்) எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதை பொருட்படுத்தாத அளவுக்கு அவர்களுடைய நேர்மை இருந்தது.

- நபி (ஸல்) அவர்கள் ஒரு துணியைக் கேட்டுவாங்கி, அதில் அந்த கருப்புக் கல்லை வைத்தார்கள்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு கோத்திரத்தாரின் பிரதிநிதிகளையும் கருப்புக் கல்லுடன் கூடிய துணியை எடுத்துச் செல்ல முன்வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அவர்கள் கஃபாவை அடைந்ததும், நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் மீது கருப்புக் கல்லை வைத்தார்கள்.

- இது ஒரு பெரிய சண்டை ஏற்படுவதைத் தடுத்தது. நபி (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தைக் கையாண்ட விதம் அனைவருக்கும் மிகுந்த நிம்மதியை அளித்தது.

- கஃபாவின் மறுகட்டமைப்பின் போது, அதில் நான்கு மாற்றங்கள் செய்யப்பட்டன:



- 1. கஃபாவின் முழு அகலத்திற்கும் அடித்தளத்தை வலுப்படுத்த போதுமான பொருட்கள் இல்லை. எனவே, மக்கள் கஃபாவை முன்பு இருந்த செவ்வக வடிவத்தைப் போல இல்லாமல் சதுரமாக மாற்ற முடிவு செய்தனர்.

- எனவே அவர்கள் அந்தப் பக்கங்களின் வெளிப்புற மூலைகளில் தூண்களை அமைத்து, அதைச் சுற்றி ஒரு தடையை உருவாக்கினர். அது இப்போது

‘கஃபாவின் ஹதீம்’ என்று அறியப்படுகிறது.

- 2. அவர்கள் கஃபாவின் உயரத்தை முதலில் இருந்ததைவிட கிட்டத்தட்ட இருமடங்காக உயர்த்தினார்கள்.

- 3. அவர்கள் கஃபாவின் கதவை சுவரின் நடுப்பகுதியில் வைத்தார்கள். இது கஃபாவிற்குள் நுழைவதை கட்டுப்படுத்த உதவும். இதற்கு முன்பு கதவு தரையில் இருந்தது.

- 4. கஃபாவின் உச்சியில் இருந்து நீர்த்தாரையை அமைத்தார்கள். அதற்கு முன் அது இருந்ததில்லை.